**தேதி :** 27.04.2026 **SC.No. :** 47/2021 PW :1 ராமராஜா

**(1ம் எதிரி, 2ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சம்பவம் நடந்ததாக கூறும் காலத்தில் நான் சமத்துவ மக்கள் கட்சியில் ஒன்றிய செயலாளராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். அந்த வகையில் பாவூர்சத்திர காவல் நிலைய உதவி ஆய்வாளர் எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ஆலங்குளத்தில் இருந்து 14 கி.மீ துாரத்தில் மேற்கில் கீழப்பாவூர் கிராமம் உள்ளது என்றால் சரிதான். ஆலங்குளத்தில் இருந்து தென்காசி மெயின்ரோட்டில் மேற்காக வந்து மகிழ்வண்ணநாதபுரத்திற்கு அடுத்ததாக உள்ள விலக்கு வழியாக வடக்கே சென்றால் கீழப்பாவூரை அடைந்து விடலாம் என்றால் சரிதான். அந்த ரோடு தார் ரோடு என்றாலும், 2 கிமீ துாரத்தில் கீழப்பாவூர் மைதானம் உள்ளது என்றால் சரிதான். அந்த தார் ரோட்டிற்கு கீழ்புறம் நான் வசிக்கும் சந்தை தோப்பு கீழத்தெரு உள்ளது என்றால் சரிதான். அந்த விலக்கில் இருந்து மேற்கே 1 கி.மீ துாரத்தில் சம்பவயிடம் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் எரிந்த கார் என்னுடைய பெயரில் இல்லை. நான் கார் வியாபாரம் செய்கிறேன். அந்த காரின் உரிமையாளரிடமிருந்து காரை நான் வாங்கியதற்கான ஆவணங்களை போலீசார் கைப்பற்றவில்லை. அந்த கார் என் நண்பருக்கு பாத்தியப்பட்ட கார் என்றால் சரியல்ல. வழக்கில் சாட்சியாக போடப்பட்டுள்ள சீனிதர்மராஜ், அருணாசலம், துரைச்சாமி ஆகியோர்களும் நானும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். அதில் இருவர்

இறந்துவிட்டனர். சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் என்னுடைய குடும்பத்திற்கும் முத்தாரம்மன் கோவில் குடும்பத்திற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அதே சமயத்தில் என்னுடைய மகன் நல்லசிவம் எங்கள் தெருவில் உள்ள மற்றொரு நபரை கொலை முயற்சி செய்ததாக ஒரு வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் இந்த வழக்கிற்கு பின்னால்தான் அந்த வழக்கு வந்தது. நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் மகன் மகேஷ் சட்டம் படித்தவர் என்றால் சரிதான். எனக்கு தகவல் கிடைத்து 10 நிமிடத்தில் நான் சம்பவயிடம் சென்றேன். அரை மணி நேரத்தில் போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது தீயணைப்பு துறை அலுவலர்கள் அங்கு இருந்தார்கள். அப்போது போலீசார் என்னை விசாரித்து எழுதிக்கொண்டார்களா என்றால் சரிதான். சிசிடிவி பதிவுகளை போலீசார் கைப்பற்றவில்லை. என்னுடைய போனை வாங்கி ஆய்வாளர் ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். 1 மாதம் கழித்து நான்தான் ஆர்டிஓ அலுவலகத்தில் வாகனத்தை கொண்டுபோய் காண்பித்தேன் என்றால் சரிதான். அந்த ஒரு மாதமும் அந்த வாகனம் என்னுடைய பராமரிப்பில்தான் இருந்தது. எதிரிகளை சம்பவம் நடந்த 2 நாட்கள் கழித்து போலீசார் எதிரிகளை அழைத்து என் முன்னால் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். மீண்டும் 6 நாட்கள் கழித்து எதிரிகளை காவல் நிலையத்திற்கு வரவழைத்து கைது செய்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய வண்டிக்கு சேதம் 3 லட்சம் ஆனது என்பதை காண்பிக்க ஆவணங்களை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ நாளில் சம்பவயிடத்திற்கு அருகில் உள்ள அருணாபேரி கோவில் திருவிழா என்றால் சரிதான். அந்த சமயம் ஆள்நடமாட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரியல்ல. குறைவாக இருந்தது. இந்த வழக்கில்

சம்மந்தப்பட்ட பைக்கை நான்தான் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் " நள்ளிரவு 2.25 மணியளவில் பால்காரர் சேகர் என்பவர் போன் மூலமாக எனக்கு கீழப்பாவூர் இபி ஆப்பிஸ் அருகே உள்ள எனது அலுவலக மேல் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டாட்டா சபாரிக்கார் TN 69Q6097 என்ற பதிவெண் கொண்டது தீப்பிடித்து எரிந்து கொண்டிருப்பதாக எனக்கு தகவல் சொன்னார். உடனே நானும், என்னுடைய மகன்கள் மகேஷ், நல்லசிவம் ஆகியோர்களுடன் சம்பவயிடத்திற்கு வந்து தீ அணைப்பு அலுவலத்திற்கு தகவல் சொன்னோம். தீ அணைப்பு துறையினர் தீயை அணைத்தார்கள். சேதம் சுமார் ரூபாய். 3 லட்சம் ஆனது. என்னுடைய அலுவலத்தில் இருந்த சிசிடிவியை பார்த்தபோது முகம் தெரியாத 3 நபர்கள் பெட்ரோல் ஊற்றி எரித்ததாக தெரிந்தது." என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் "அருணாசலம், துரைச்சாமி ஆகியோர்கள் எதிரிகள் மகாராஜன், துரைச்சாமி மற்றும் ஒருவரும் ஓடுவதை பார்த்ததாக கூறினார்கள். எதிரிகள் பைக்கை எங்களுடைய அலுவகத்தின் பின்னால் போட்டுவிட்டு ஓடியதாக மறுநாள் தகவல் சொன்னார்கள்." என்று கூறவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் " எனக்கும், முத்தாளம்மன் கோவில் நிர்வாகியான சுடலையாண்டி நாடார், சுரேஷ் முருகன், சேடினா முருகன், பொன்னுசாமி நாடார் ஆகியோர்களுக்கும் இருந்த சொத்து பிரச்சனை காரணமாக அவர்களின் தூண்டதலின் பேரில்தான் எதிரிகள் இவ்வாறு செய்துள்ளார்கள். "என்று கூறவில்லை என்றால் சரியல்ல. வாகனம் என்னுடைய கவனக்குறைவால் என்னுடைய வீட்டில் வைத்து ஏற்பட்ட விபத்தினால் எரிந்து சேதமடைந்தது என்றாலும், அதற்கான காப்பீடு பெறும் வகைக்கு கடையில் வைத்து 2 மர்ம நபர்களால் எரிக்கப்பட்டதாக கூறி பொய் புகார்

கொடுத்தேன் என்றால் சரியல்ல. 3 வது எதிரி என்னிடம் வாகனத்தை அடகு வைத்து பணம் பெற்றிருந்தார் என்றாலும், அதனை திரும்ப செலுத்தனால் அந்த வாகனத்தை நான் கைப்பற்றி வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. 3 ம் எதிரி பணத்தை திருப்பி செலுத்திவிட்டு மேற்படி வாகனத்தை திருப்பி கேட்டப்போது நான் அதிக வட்டிக்கேட்டு மேற்படி வாகனத்தை தர மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதன் காரணமாக இந்த 3 வது எதிரி என் மீது பாவூர் சத்திரம் காவல் நிலையத்தில் இது குறித்து புகார் அளித்திருந்தார்என்றாலும், 3 வது எதிரிக்கு துணையாக 1,2 எதிரிகள் வந்திருந்தார்கள் என்றாலும், அதனால எதிரிகள் மீது பகை கொண்டு காவல் துறையினர் உதவியுடன் இந்த வழக்கில் எதிரிகளை பொய்யாக சிக்க வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.28 11:08:15 +0530